**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 428/2023**

திருமதி. கண்ணம்மாள் (P.W.–1) **06.02.2026.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**:**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். தாவாச்சொத்தை எப்போது கிரையம் பெற்றீர்கள் என்றால் என் கணவர் இறப்பதற்கு முன்பு 2012 ஆம் வருடம் அவர்தான் கிரையம் பெற்றார். தாவாச்சொத்தை கிரையம் பெற்ற கிரைய ஆவண எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவாச்சொத்தை கிரையம் பெறும் சமயத்தில் தாவாச்சொத்திற்குரிய மூல ஆவணங்களை பார்த்தீர்களா என்றால் என் கணவர் கிரையம் பெற்றார் அவருக்குத்தான் தெரியும். என் கணவர் சொத்தை கிரையம் பெற்றதால் மூல ஆவணங்களின் விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரி. சர்வே எண். 157/2 சொத்து 1ம் பிரதிவாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதை எப்போது தெரிந்து கொண்டீர்கள் என்றால் 2022 ஆம் வருடம் கோவிலில் இருந்து அறிவிப்பு வந்த போது தெரிந்து கொண்டேன். அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகு சென்று விசாரித்தீர்களா என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று கேட்டேன். அவ்வாறு கலந்து கொண்டதற்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து குறிப்பேடுகளில் கையெழுத்து செய்திருப்பீர்கள் என்றால் நான் கையொப்பம் செய்யவில்லை.

தாவாச்சொத்தை பொறுத்து 1968 ஆம் வருடம் கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் முன்னிலையில் ஒரு விசாரணை நடந்தது என்றால் எனக்குத் தெரியாது. அந்த சமயத்தில் சொத்துக்களில் சுவாதீனத்தில் இருந்த நபர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் தெரியாது.

செட்டில்மெண்ட் தாசில்தார் சுவாதீனம் இருந்த நபர்களை விசாரணை செய்து சர்வே எண். 157/2 சொத்திற்கு இரயத்துவாரி பட்டா கொடுத்தார் என்றால் தெரியாது. என்னுடைய முன்பாத்தியஸ்தர்கள் செட்டில்மெண்ட் தாசில்தார் விசாரணையில் தாவாச்சொத்தில் அவர்களுக்கு உள்ள உரிமையை பொறுத்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. என்னுடைய முன்பாத்தியஸ்தர்கள் செட்டில்மெண்ட் தாசில்தார் விசாரணையில் எந்த ஆவணங்களின் அடிப்படையில் சொத்துக்கள் கிரையம் பெற்றார்கள் என்பதையும், அதற்குரிய ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது.

என்னுடைய மாமனாரின் ஒரு சகோதரர் பெயர் ராமசாமி என்றால் சரி. செட்டில்மெண்ட் தாசில்தார் விசாரணையில் ராமசாமி, நாச்சிமுத்துவும் ஆஜர் ஆனார்கள் என்றால் தெரியாது. அவர்கள் தாவாச்சொத்தில் என்ன உரிமை பாத்தியம் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. அந்த விசாரணையின் போது நல்லூர் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றால் தெரியாது. அந்த சமயத்தில் அவர் இனாம் பி பதிவேடு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அந்த பதிவேட்டில் நல்லூர் கிராமம் க.ச.எண்.157/2 முதல் பிரதிவாதி கோவிலுக்கு நாதஸ்வர ஊழியத்திற்காக சொத்து வழங்கப்பட்ட விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவில் என்னுடைய மாமனாரின் சகோதரர் விசாரணையின் போது எந்த ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் தெரியாது.

தாவாச்சொத்து முதல் பிரதிவாதி கோவிலுக்கு சட்டவிதிகளின் படி பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 100 வருடங்களுக்கு மேல்

தாவாச்சொத்து முதல் பிரதிவாதி கோவிலின் சுவாதீன அனுபவத்தில் உள்ளது என்றால் தவறு. முதல் பிரதிவாதி கோவிலின் நிர்வாகத்தில் தாவாச்சொத்தை பராமரித்து அதில் வரும் வருவாய் நாதஸ்வர ஊழியத்திற்கு கொடுத்தார்கள் என்றால் தவறு. இந்த விவரங்கள் 1863 இனாம் பதிவேட்டில் சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. சொத்து என் மாமனாரின் அப்பா காலத்தில் இருந்து அவர்களிடம் இருந்து வருகிறது. சர்வே எண். 157/2 காலையில் உள்ள சொத்து முதல் பிரதிவாதி கோவிலின் சுவாதீனத்தில்தான் இன்று வரை இருந்து வருகிறது என்றால் தவறு. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். முதல் பிரதிவாதி கோவில் பெயரில் இரயத்துவாரி பட்டா கொடுக்கப்பட்டது எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல. அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தாவா பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் தவறு. தாவாச்சொத்தில் முதல் பிரதிவாதி கோவில் தொடர் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் தவறு. தாவாச்சொத்து முதல் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் தவறு. தாவாச்சொத்திற்கு கந்தாயம் செலுத்துவதில்லை என்றால் தவறு. தற்சமயம் உள்ள கந்தாய இரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். தாவாச்சொத்தில் விவசாயம் செய்து வருகிறோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருவாய்த்துறையினர் விசாரணை மேற்கொண்டு அதன் அடிப்படையில் வருவாய் ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் தவறு. வா.சா.ஆ.1 இனாம் சர்வே என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. 1924 ல் இனாம் சர்வே கிடையாது. வா.சா.ஆ.4 லிலும் அவ்வாறு உள்ளது என்றால் தவறு. கிரையம்

ஏற்பட்டுவிட்டதால் இனாம் சர்வேவே வராது. தாவாச்சொத்து நாதஸ்வர ஊழியத்திற்காக கொடுக்கப்பட்டது என்பது எனக்கும், என் கணவருக்கும் நன்கு தெரியும் என்றால் தவறு. தாவாச்சொத்து செண்ட் என்ன விலை போகும் என்றால் தெரியாது. தாவாவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் படி எங்களுக்கே உரிமையே இல்லை என்றால் தவறு. வா.சா.ஆ.1ன் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து முதல் பிரதிவாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

**ஒம்/- கே. ஆர். கண்ணன்.,**
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.